Project 128
செயற்றிட்டம் 128



DP EDUCATION

Coding School

micro:bit

ஆரம்பிக்கவும்


LIVEWORKSHEETS

முதலில் On Start Block ஒன்றை Drag செய்து கொள்க.

- Variables இன் மேல் click செய்து Make a new variable இன் மேல் click செய்க.




- New variable இன் மேல் click செய்து Number1 மற்றும் Number2 என variable 2 உருவாக்கிக் கொள்க.
- On Start Block இற்குள் set Number block 2 drag செய்து கொள்க.




- Button A click செய்யும் போது காட்டும் பெறுமானம் 1 ஆல் அதிகரிப்பதற்கு code உருவாக்குவோம்.
  - Input இற்குள் உள்ள on button A pressed block ஒன்றை drag செய்து கொள்க.
  - Variables இற்குள் Change Number1 block ஒன்றை on button A pressed block இற்குள் drag செய்து கொள்க.
  - Basic இற்குள் உள்ள Show number block ஒன்றை drag செய்து அதன் பெறுமானம் காட்டும் இடத்திற்கு Variables இற்குள் உள்ள Number1 block ஐ drag செய்து கொள்க.

LIVEWORKSHEETS



❖ Button B click செய்யும் போது காட்டும் பெறுமானம் 1 ஆல் அதிகரிப்பதற்கு code உருவாக்குவோம்.

- Input இற்குள் உள்ள on button A pressed block ஒன்றை drag செய்து கொள்க.
- அதன் A இற்கு பதிலாக B என காட்டுக.
- Variables இற்குள் உள்ள Change Number2 block இற்குள் on button B pressed block இற்குள் drag செய்து கொள்க.
- Basic இற்குள் உள்ள Show number block ஒன்றை drag செய்து அதன் பெறுமானங்கள் காட்டும் இடத்திற்கு Variables இற்குள் உள்ள Number2 block ஐ drag செய்து கொள்க.



LIVEWORKSHEETS

❖ A+B button ஐ click பண்ணும்போது A மற்றும் B மூலம் காட்டிய பெறுமானங்களின் கூட்டுத்தொகையை காட்டுவதற்கு code உருவாக்கவும்.

- Variables இன் மேல் click செய்து Make a new variable மூலம் Total என variable ஒன்றை உருவாக்கிக் கொள்க.
- Set Total block ஐ On Start Block இற்குள் drag செய்து கொள்க.



- Input இற்குள் உள்ள on button A pressed block ஒன்றை drag செய்து அதன் A இற்கு பதிலாக A+B என உருவாக்கிக் கொள்க. Variables இற்குள் உள்ள set Total block ஒன்றை அதற்குள் drag செய்து கொள்க.
- பெறுமானம் காட்டும் இடத்திற்கு Math இற்குள் உள்ள கூட்டல் அடையாளத்துடன் ஆன block ஐ drag செய்து கொள்க.
- அதன் பெறுமானம் இரண்டாக Variables இற்குள் உள்ள Number1 மற்றும் Number2 என முறையாகப் பெற்றுக் கொடுக்க.
- கூட்டுத்தொகையை காட்டுவதற்கு Basic இற்குள் உள்ள show number block ஐ drag செய்து அதன் பெறுமானமாக Variables இற்குள் உள்ள Total பெற்றுக் கொடுக்க.

LIVEWORKSHEETS



- Logo ஐ press பண்ணும் போது Number1 பெறுமானத்திலிருந்து Number2 பெறுமானத்தை குறைக்கும் போது கிடைக்கும் பெறுமானம் கிடைப்பதற்கு தேவையான code உருவாக்கவும்.
  - Input இற்குள் உள்ள on logo pressed block ஐ drag செய்து கொள்க.
  - Variables இற்குள் உள்ள set Total block ஒன்றை அதற்குள் drag செய்து கொள்க.
  - பெறுமானம் காட்டும் இடத்திற்கு Math இற்குள் உள்ள கழித்தல் அடையாளத்துடன் ஆன block ஐ drag செய்து கொள்க.
  - அதன் பெறுமானம் இரண்டு என Variables இற்குள் Number1 மற்றும் Number2 என முறையாக பெற்றுக் கொடுக்க.
  - Number1 மற்றும் Number2 இல் குறைந்த பெறுமானத்தின் விடையை காட்டுவதற்கு Basic இற்குள் உள்ள show number block ஐ drag செய்து அதன் பெறுமானமாக Variables இற்குள் உள்ள Total பெற்று தருக.


LIVEWORKSHEETS



❖ Shake button ஐ click பண்ணும் போது எல்லாவற்றினதும் பெறுமானம் 0 ஆகி screen இலிருந்து எல்லா பெறுமானங்களும் நீங்குவதற்கு code உருவாக்குவோம்.

- Input இற்குள் உள்ள on shake block ஐ drag செய்க.
- அதற்குள் Variables இற்குள் உள்ள set Number1, set Number2 ,set Total block மூன்றையும் drag செய்து கொள்க.

- screen , clear ஆக வேண்டி இருப்பதால் Basic இற்குள் உள்ள clear screen block ஐ drag செய்து கொள்க.



LIVEWORKSHEETS